மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்
21 DEC 2016
* கே.கே.நகர், சென்னை – 600078 *

சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பற்றோர் நிவாரண உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை, 2016–2017 ஆம் நிதியாண்டில் தொடர, திட்டத் தொடராணை மற்றும் 24,556 பயனாளிகளுக்கு நிவாரண உதவித் தொகை வழங்க ரூ.22,66,48,800/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1D) எண். 85

நாள்: 12–12–2016
துன்முகி, கார்த்திகை 27,
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.21, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.3)த் துறை, நாள் 23–03–2015
2. அரசாணை(2D) எண்.06, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 23–11–2015.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடிதம் ந.க.எண்.2657/ மா.தி.ந.3–1/2016, நாள் 18.07.2016.

------------

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மாற்றுத் திறனாளிகள் பள்ளியிறுதி / மெட்ரிக் மற்றும் அதற்கு கீழான தகுதியுள்ளவர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.300/–லிருந்து ரூ.600/– ஆக உயர்த்தியும், மேனிலைப் பள்ளி தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.375/–லிருந்து ரூ.750/– ஆக உயர்த்தியும், மற்றும் பட்டதாரிகள்/ முதுனிலைப் பட்டதாரிகளுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.450/–லிருந்து ரூ.1000/– ஆக வேலைவாய்ப்பற்றோர் நிவாரண உதவித் தொகையை உயர்த்தியும் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2015–2016 ஆம் நிதியாண்டில் வேலைவாய்ப்பற்ற அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் வேலை வாய்ப்பற்றோர் நிவாரண உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை தொடர, திட்டத் தொடராணையும், மற்றும் இச்செலவினத்திற்கென 24,455 பயனாளிகளுக்கு உதவித் தொகை வழங்கிட ரூ.22,45,48,800/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், 2016–17 ஆம் நிதியாண்டிற்கு அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 24,556 பயனாளிகளுக்கு ரூ.22,66,48,800/– கீழ்கண்டவாறு நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| வ.எண். | கல்வி தகுதி | வழங்கப்படும் தொகை | மாதங்கள் | பயனாளிகள் எண்ணிக்கை | தேவைப்படும் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1. | பள்ளியிறுதி/ மெட்ரிக் மற்றும் அதற்கு கீழான தகுதி | ரூ.600/– மாதத்திற்கு | 12 மாதங்கள் | 9,749 | ரூ.7,01,92,800/– |
| 2. | மேனிலைப் பள்ளி தேர்ச்சி | ரூ.750/– மாதத்திற்கு | 12 மாதங்கள் | 7,076 | ரூ.6,36,84,000/– |
| 3. | பட்டதாரிகள்/ முதுனிலைப் பட்டதாரிகள் | ரூ.1000/– மாதத்திற்கு | 12 மாதங்கள் | 7,731 | ரூ.9,27,72,000/– |
| | மொத்தம் | | | 24,556 | ரூ.22,66,48,800/– |

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலித்த அரசு, அதனை ஏற்று 2016–17 ஆம் நிதியாண்டில், அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் வேலை வாய்ப்பற்றோர் நிவாரண உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை தொடரவும் மற்றும் 24,556 பயனாளிக்கு தேவைப்படும் ரூ.22,66,48,800/– (ரூபாய் இருபத்து இரண்டு கோடியே அறுபத்தாறு இலட்சத்து நாற்பத்து எட்டாயிரத்து எண்ணூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும், அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்:-

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்– 02 சமூக நலன்– 101 மாற்றுத் திறனாளிகள் நலன் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II மாநிலத் திட்டம் –MJ–வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்துள்ள வேலை வாய்ப்பற்ற மாற்றுத் திறனாளி / காதுகேளாதோர் / மனவளர்ச்சி குன்றியோர்களுக்கு வேலை வாய்ப்பற்றோருக்கான படிகள் வழங்குதல்– 09 உதவித் தொகை 01. நடப்புச் செலவுக்கான உதவித் தொகை."
(த.தொ.கு. 2235–02–101–MJ–0918)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கு தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.11,59,00,800/– 2016–17–ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் இச்செலவினம் 2016–2017 ம் ஆண்டு துணை மதிப்பீட்டில் சேர்ப்பதன் மூலம் சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். 2016–17 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் நிதியொதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது. இச்செலவினத்தை 2016–17–ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான கருத்துருவையும், 2016–2017 ம் ஆண்டு துணை மதிப்பீட்டில் மேற்கண்ட செலவினத்தை சேர்ப்பதற்கு வரைவு விளக்கக் குறிப்பினையும் தவறாமல் நிதி(வ.செ.பொ.I/சந) துறைக்கு உரிய

நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.59485/நிதி(சந)/2016, நாள் 24.11.2016 கண்டுள்ள நிதித் துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதிபொதுக்கப் பேரேடு எண்.1310 (ஆயிரத்து முன்னூற்று பத்து)

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, இயக்ககம், கிண்டி, சென்னை–32.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (மாற்றுத் றனாளிகளுக்கானமாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர்,சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)
நகல்:–
நிதி (சந/வ.செ.பொ.I/II) துறை,சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(மா. சுப்ரமண்ய பிள்ளை)
அரசு சார்புச் செயலாளர்.